# ஆதார ஆவணங்கள்

## பிரதான ஆவணம்

- **உரிமைகள் பற்றிய அறிக்கை (Statement of Rights)**
  *'மனநல ஆரோக்கிய சட்டம் 2016'* இன் படியான உங்களது உரிமைகள்

## வழிகாட்டல்கள்

- **நோயாளியின் உரிமைகளுக்கான வழிகாட்டி**
- **மனநல ஆரோக்கியத்திற்கான முன்கூட்டிய உடல்நலக் கட்டளை**
  வழிகாட்டியும் முன்கூட்டிய உடல்நலக் கட்டளைப் படிவமும்
- **பெயர்மொழியப்பட்டுள்ள உதவியாளர்கள்**
  வழிகாட்டியும் நியமனப் படிவமும்

## தகவலேடுகள்

- நோயாளியின் உரிமைகள்
- பெயர்மொழியப்பட்டுள்ள உதவியாளரின் பொறுப்பு
- குடும்பத்தினர், கவனிப்பாளர்கள் மற்றும் ஏனைய உதவியாளர்களுக்குள்ள உரிமைகள்
- முன்கூட்டிய உடல்நலக் கட்டளைகள் மற்றும் குறைந்த கட்டுப்பாடுள்ள சிகிச்சை வழிமுறை

## சிற்றேடுகள்

- உதவியாளர்கள்
- உங்கள் உரிமைகள்

இவ்வாவணங்களைப் பார்வையிட அல்லது மேலதிக தகவல்களுக்குச் செல்க:

**www.health.qld.gov.au/mental-health-act**

© குயின்ஸ்லாந்து மாநிலம் ('குயின்ஸ்லாந்து சுகாதாரம்')
creativecommons.org/licenses/by/3.0/au

QH841 0117

Tamil



'மனநலச் சட்டம் 2016'
(Mental Health Act 2016)

# 'முன்கூட்டிய உடல்நலக் கட்டளைகள்'
## (Advance health directives)



Queensland Government

# ‘முன்கூட்டிய உடல்நலக் கட்டளைகள்’ என்பது என்ன?

ஒரு ‘முன்கூட்டிய உடல்நலக் கட்டளை’ என்பது உங்கள் உடல்நலம் சம்பந்தமாக நீங்கள் தீர்மானங்கள் மேற்கொள்ள உங்களுக்கு உதவும் ஒரு ஆவணமாகும். எதிர்காலத்தில் நீங்கள் நோய்வாய்ப்பட்டு உங்களால் தீர்மானம் மேற்கொள்ள முடியாத ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாவணம் பயன்படுத்தப்பட முடியும்.

---

**ஒரு ‘முன்கூட்டிய உடல்நலக் கட்டளை’ யின் பிரகாரம் உங்களுக்கு பின்வருவன இயலுமாகும்:**

- நீங்கள் பெற விரும்பும் சிகிச்சைக்கும் கவனிப்புக்கும் சம்மதித்தல்
- நீங்கள் பெற விருப்பமில்லாத சிகிச்சை மற்றும் கவனிப்பு எது என்று அறிவித்தல்
- உங்கள் சிகிச்சை மற்றும் கவனிப்பு தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ள ஒருவரை நியமித்தல்
- உங்கள் உடல்நலக் கவனிப்பு மற்றும் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பாக உங்கள் கருத்துக்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் விருப்பத்தெரிவுகளை வெளிப்படுத்தல்.

நீங்கள் ஆரோக்கியமாகவும் தீர்மானங்கள் மேற்கொள்ள முடியுமாகவும் இருக்கும் எவ்வேளையிலும் ஒரு முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை மேற்கொள்ள முடியும். உங்கள் மனநல ஆரோக்கியத்தை புரிந்துகொள்ளக் கூடிய ஒரு மருத்துவருடன் முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை மேற்கொள்வது பற்றி கலந்துரையாடவும்.

## முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றினை நான் ஏற்படுத்தி இருக்கும்போது சிகிச்சை உரிமை பெற்ற அதிகாரி ஒருவர் எனக்காக ஏற்படுத்தப்பட முடியுமா?

மன நோயுடைய ஒருவருக்கு அவரின் இணக்கமின்றி சிகிச்சையும் கவனிப்பும் வழங்குவதற்கு சிகிச்சை உரிமை பெற்ற அதிகாரி மருத்துவரொருவருக்கு அதிகாரமளிப்பார்.

நீங்கள் மீண்டும் உடல் நலம்பெற உங்களுக்குத் தேவையான சிகிச்சைக்கும் கவனிப்பிற்கும் சம்மதமளித்து முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை நீங்கள் ஏற்படுத்தி இருப்பின் சிகிச்சை உரிமை பெற்ற அதிகாரி ஒருவர் ஏற்படுத்தப்பட இயலாது.

உங்களுக்குத் தேவையான சிகிச்சைக்கும் கவனிப்பிற்கும் உங்களது முன்கூட்டிய உடல்நலக் கட்டளை சம்மதம் அளிக்கவில்லையாயின், சிகிச்சை உரிமை பெற்ற அதிகாரி ஒருவரை ஏற்படுத்த வேண்டிய தகுதித்தேவைகள் முற்றிலும் பொருந்திவரும் தருணத்தில் சிகிச்சை உரிமை பெற்ற அதிகாரி ஒருவர் ஏற்படுத்தப்படக் கூடும்.

## முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை நான் எவ்வாறு ஏற்படுத்துவது?

*மனநல ஆரோக்கியத்திற்கான முன்கூட்டிய உடல்நலக் கட்டளை - வழிகாட்டலும் விண்ணப்பப்படிவமும் (mental health — guide and form)* என்ற படிவத்தை வாசித்துப் பூரணப்படுத்துவதன் மூலம் முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை நீங்கள் ஏற்படுத்தலாம். இதனை மனநல ஆரோக்கிய சேவை ஒன்றில் அல்லது *‘மனநல ஆரோக்கிய சட்டம் 2016’* -இன் வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## உங்கள் உடல்நலப் பதிவுகளை புதுப்பித்தல்

மனநல சேவையொன்றிலுள்ள உங்கள் உடல்நலப் பதிவுகளில் உங்கள் முன்கூட்டிய உடல்நலக் கட்டளை பதியப்படும்படி நீங்கள் கேட்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், எதிர்கால சந்தர்ப்பமொன்றில் உங்களுக்கான தீர்மானங்களை உங்களால் மேற்கொள்ள முடியாமல் போனால், நீங்கள் முன்கூட்டிய உடல்நலக் கட்டளை ஒன்றை மேற்கொண்டிருப்பதை மருத்துவர் ஒருவர் அறிந்து கொள்வார். குயின்ஸ்லாந்திலுள்ள எந்தவொரு மனநல சேவையிலும் உள்ள மருத்துவர்களுக்கும் உங்கள் கட்டளை கிடைக்கக் கூடியதாயிருக்கும்.

## முன்கூட்டிய உடல்நலக் கட்டளைகள் பற்றி மேலும் அறிய வேண்டுமாயின் எங்கிருந்து உதவி பெறலாம்?

**பின்வருவோரிடமிருந்து மேலதிக தகவல் பெறலாம்:**

- பொது மனநல சேவையொன்றிலுள்ள ஒரு ‘நோயாளி உரிமைகள் குறித்த சுதந்திர ஆலோசகர்’ (Independent Patient Rights Adviser)
- மனநல சேவையொன்றிலுள்ள ஓர் ஊழியர்
- *‘மனநல ஆரோக்கிய சட்டம் 2016’* - இன் வலைத்தளம்